[1975 அக்டோபர் 29

இப்போது இரண்டாம் நிலே தமிழ் ஆசிரியர்களும் அதைப் போல் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். இரண்டாம் நிலே ஆசிரியர்கள் இடைநிலே ஆசிரியர் பயிற்சி பெற்று 10 ஆண்டுக் காலம் பணியாற்றியிருந்தால் அவர்கள் முதல் நிலே ஆசிரியர்களாகக் கருதப்படுவார்கள் என்றும், பொதுக் கல்வித் தகுதியில்லாமல் இடைநிலே ஆசிரியர்கள் தகுதிபெருமல் இருக்கிறவர்கள் 15 ஆண்டுக்காலம் பணியாற்றியிருந்தால் அவர்கள் முதல்நிலே ஆசிரியர்களாக ஆகலாம் என்றும் அனுமதித்திருக்கிருேம். கொஞ்ச காலத்தில் இப்போது இருக்கிறவர்கள் எல்லாம் முதல் நிலே ஆசிரியர்களாக எடுத்துக்கொள்ளப்பட்டுவிடுவார்கள். இப்போது புதிதாக வருகிறவர்களேயும் முதல்நிலே ஆசிரியர்களாகவே நியமிக்கப்படுகின்ற அளவிற்கு இருக்கிறது. ஆகவே வருங் காலத்தில் இரண்டாம் நிலே தமிழ் ஆசிரியர்கள் பதவிகள் இல்லாமல் போகும் என்ற அளவிற்குத்தான் இப்போது வழிவகைகள் செய்யப்படுகின்றன.

சங்ககிரி அரசு மருத்துவ மனே

*111 வினு—திரு. வ. முத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி நகரத்தில் அரசு மருத்துவமனே ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனேயில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) ஏற்கனவே எட்டு படுக்கை வசதி கொண்ட அரசு மருத்துவமனே ஒன்று சங்ககிரியில் செயல்பட்டு வருகிறது. கேள்வியோடு தொடர்பான கருத்தாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 8—3—1975 அன்று 24 படுக்கை வசதிகள் கொண்ட வார்டு ஒன்று கட்டுவதற்கு ரூ. 1 லட்சத்து 60 ஆயிரம் அனுமதிக்கப்பட்டு அதற்கான செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. வ. முத்து: தலேவர் அவர்களே, உத்தரவு பிறப்பித்தும் கூட இன்னும் கட்டடம் கட்டாத நிலேயில் உள்ளதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

1975 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இப்போது பொதுப் பணித்துறைக்கு அனுப்பப்பட்டு இருக்கும். அவர்கள் டெண்டர் முதலானவைகளைக் கேட்டு கட்டச் செய்வார்கள்.

Special allowances for Doctors.

*112 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) whether any extra allowances are paid to the doctors who conduct post-mortem cases; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: கிராமப் பகுதிகளிலே கொலை போன்று ஏதாவது ஏற்பட்டுவிட்டால் போஸ்ட்மார்ட்டம் செய்வதற்கு உடனடியாக டாக்டர் இல்லாத நிலையில் அவர்கள் லீவ் போட்டுவிடுகிறார்கள். ஆகவே, தாலுகா ஹெட்க்வார்ட்டர்ஸ் மருத்துவமனைக்கு 10, 12 மைல்கள் கடந்து கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. அதற்காக தனியாக ஸ்பெஷல் அலவன்ஸ் என்று கொடுத்தால் அவர்கள் இருப்பார்கள். ஆகவே, அதை கிராமத்திலேயே செய்யக்கூடிய முயற்சியை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, போஸ்ட் மார்ட்டம் செய்வது என்பது அது சம்பந்தமாக பின்னாலே வழக்கு ஏதாவது வருமானால் அந்த வழக்கிலே தக்க சான்றுகள் அவர்கள் முறைப்படி கொடுப்பதற்காக கடமைப் பட்டு இருக்கக்கூடிய காரியமாகும். மருத்துவத் துறையிலே இருக்கிற யாராக இருந்தாலும் அன்றாடம் அவர்கள் செய்கின்ற கடமைகளிலே இதுவும் ஒன்றாகச் செய்யப்படக்கூடிய முறையில் இருக்கவேண்டும். ஆகவே, அலவன்ஸ் கொடுப்பது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. கிராமத்திலே உள்ள டாக்டர்கள் தனித்தனியாக போஸ்ட் மார்ட்டம் செய்வது என்று வைத்தால் சட்டப் பிரச்னை, சிக்கல்கள் எல்லாம் உண்டாகும். ஆகவே, தாலுகா மருத்துவமனை அளவில் இது ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. அங்கே போஸ்ட் மார்ட்டம் செய்வதுதான் பொருத்தமானதாகும்.